# தமிழர் பாரம்பரியத்தில் ‘காப்பு’

# ‘*Kappu’* in Tamil Tradition

முனைவர் க.சில்லாழி / Dr K.Silllalee [1]

பேராசிரியர் முனைவர் மு.இராசேந்திரன் / Professor Dr. M. Rajantheran [2]

முனைவர் இரவிந்திரன் மாரையா / Dr.Ravindaran Maraya[3]

Date of submission: 2022-10-10
Date of acceptance: 2022-10-30
Date of Publication: 2022-12-28
Corresponding author's Name:
Dr. M. Rajantheran
Email: rajantheran@um.edu.my

## Abstract

Civilisation represents the peak of a society's progress. When a civilised society shares its knowledge with others, it results in many benefits: further progression, fast accommodation according to rapid changes in the world, and the construction of a strong network with other global communities. A society's civilisation is developed upon its cultural values, reflected in its daily lives, religion, beliefs, science, and technology. Despite the changes in cultural values of a society prompted by time, the individuality of these values remains steadfast. The cultural rituals embedded within the values uphold the culture of a community, which also extends to the Tamil culture. The Tamil cultural rituals do not solely reflect the society's religious beliefs but expound the society's science, life requirements, philosophy, moral values, oneness with nature, financial values, and the structure of the community. Tying *Kaapu* is a cultural ritual that highlights Tamil culture's previously mentioned significant components. This paper aims to investigate the manners in which the *Kaapu* ritual is observed in most Tamil religious and cultural events while analysing the science and philosophy ingrained in the practice

**Keywords** : Kaappu, Hindu Festival, Retuals, Marriage, Valaikappu ritual

## முன்னுரை

ஒரு சமுதாயத்தின் அடைவைக் குறிப்பது நாகரிகம். நாகரிகம் அடையப் பெற்ற சமூகமானது உலக மக்களுக்கு வழிகாட்டக் கூடிய தரத்தை அடைந்ததாகக் கருதப்படுகிறது. இது மனித சமுதாயத்தின் அடைவின் உச்சம். நாகரிகம் அடையப் பெற்ற சமுதாயமானது தனது வளர்ச்சியை மேம்படுத்தி காலத்திற்குத் தக்கவாறு அதன்

---

[1] The author is a Senior Lecturer in the Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. silllalee@um.edu.my

[2] The author is a Professor in the Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. rajantheran@um.edu.my

[3] [2]The corresponding author is a Senior Lecturer in the Department of Indian Studies, University Malaya, Kuala Lumpur, Malaysia. ravindaranm@um.edu.my

மாற்றங்களை உள்வாக்கிக் கொள்வதோடு, பிற உலக நாகரிகங்களோடு தொடர்பினை மேம்படுத்திக் கொள்கிறது. இத்தொடர்பின் முதுநிலையில் பிற நாகரிகங்களின் அடைவுகளைத் தனது நாகரிகத்தின் மேம்பாட்டிற்காக உள்வாங்கிக் கொள்கிறது. ஆயினும் தனது நாகரிகத்தின் வாழ்க்கை மற்றும் பண்பாட்டுக் கூறுகளில் அவை மாற்றத்தையோ, நீக்கத்தையோ அல்லது பாதிப்பையோ ஏற்படுத்தாத வண்ணமே இந்த ஏற்றலானது நடைபெறுகிறது (பாலசுப்பிரமணியன், 1974, p.75).

ஒரு சமுதாயத்தின் நாகரிக வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைவது அவர்களின் பண்பாட்டுக் கூறுகளே ஆகும். மேலும் ஒரு சமுதாயத்தின் பண்பாட்டுக் கூறுகளாவன அச்சமூகத்தின் அன்றாட வாழ்க்கை, சமயம், நம்பிக்கைகள், அறிவியல், தொழில்நுட்பம் என அனைத்திலும் இயைந்தே தோன்றுகிறது. பண்பாடு அற்ற சமுதாயம் நாகரிகம் அடைந்த சமுதாயமாக ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. ஏனெனில் பண்பாடானது ஒரு சமுதாயத்தின் அடையாளம் ஆகும். பண்பாடு காலத்திற்கு ஏற்ப மாற்றம் காணலாம் ஆனால் அதன் தனித்துவம் மாறாதது (Taylor 1958).

பண்பாட்டுக் கூறுகளாவன ஒரு சமுதாயத்தின் நம்பிக்கைகள், பயன்பாட்டுப் பொருள்கள், குறியீடுகள், சடங்குகள், உணர்வின் வெளிப்பாடுகள், கொள்கை / கோட்பாடுகள், சடங்குகள் போன்றவற்றின் மூலமாக நிறுவப்படுகின்றன. இவை ஒவ்வொன்றும் தனக்கான காரண காரியத்தை முன்னிருத்திப் பண்பாட்டுக் கூறாக நிலைபெறுகின்றன. இவற்றின் முக்கியத்துவத்தின் அடிப்படையிலேயே ஒரு பண்பாட்டுக் கூறானது நிலைபெறுவதும் அல்லது காலத்தால் கறைந்து போவதும் நிகழ்கிறது. இவற்றுள் சடங்குகளாவன எப்போது ஒரு சமுதாயத்தின் நம்பிக்கையைக் கட்டிக் காக்கும் பண்பாட்டுக் கூறாக விளங்குகிறது (Patrik Nolan, 1999).

தமிழர் பண்பாட்டைப் பொருத்த வரையில் இவர்களின் சடங்குகள் யாவும் சமய நம்பிக்கையை மட்டும் சார்ந்திருக்காமல் அறிவியல், வாழ்வியல் தேவை, தத்துவங்கள், நன்னெறிக் கூறுகள், இயற்கையோடு இயைந்து வாழ்தல், பொருளாதாரச் சிந்தனை, சமூகக் கட்டமைதியைப் பாதுகாத்தல் போன்ற பவேறு கூறுகளை உள்ளடக்கியதாகவே விளங்குகின்றன. இவாறானா தமிழரின் பண்பாட்டுச் சடங்குகளுள் ஒன்றாக இன்றளவும் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வருவதுதான் ‘காப்புக் கட்டும்’ சடங்காகும். பொதுவில் காப்புக் கட்டுதல் என்றவுடன் கோவில் திருவிழாக்களும், சமயச் சடங்குகளுமே நினைவுக்கு வரும். ஆனால் காப்புக் கட்டும் சடங்கானது

இதையெல்லாம் கடந்து தமிழரின் வாழ்க்கைக் கட்டமைதியைப் பாதுகாப்பதிலும் அவர்களின் வளச்சியிலும் மிகப்பெரிய பங்காற்றுகிறது.

**‘காப்பு’**

‘காப்பு’ எனும் சொற்பதம் பொதுவில் பாதுகாப்பையே குறிப்பதாக அமைகிறது. இதன் ஆழ்ந்த உட்பொருளும் இதுவே ஆகும். *தமிழ்ப் பேரகராதி* ‘காப்பு’ என்பதற்கு இரட்சை, காப்பாற்றுதல், பாதுகாத்தல், கை ஆபரணம்/காப்பு, கால் வளையம்/காப்பு, காவல் போன்ற பொருள்களைத் தருகிறது (*கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி*, 1992).

மேலும் பாதுகாவல், கண்ணேறு காத்திட்ட காப்பு, காப்பு நாண், மூலிகை கெடாமலிருக்கவும் அதன் கெட்டகுணங்கள் நீங்கவும் அதைச்சுற்றிக் கட்டும் மந்திரக்கயிறு, எடுத்த காரியம் விஷயம் இனிது முடியும் பொருட்டு நூலின் தொடக்கத்தில் செய்யும் தெய்வ வணக்கம், கைகால்களில் அணியும் அணி, திருமணம் முதலிய சடங்குகளில் தீய சக்திகளிலிருந்து காக்க மணமகன் மற்றும் மணமகள் கையில் கட்டும் மஞ்சள் கயிறு, தண்ணீர் முதலியவை அரிக்காதிருக்கும் வகையில் அல்லது மின்சாரம் முதலியவை வெளியே பரவாத வகையில் செய்யப்படும் ரசாயனப் பூச்சு, கோவில் விக்கிரகங்களை நிலைநிறுத்தும் பொருட்டு எட்டு வித மூலிகைகளாக் செய்யப்படும் காப்பு (பந்தனம்) போன்றவையும் காப்புகளாகக் குறிப்பிடப்படுகின்றன (https://agarathi.com/word).

இதன் அடிப்படையில் காணும் போது ‘காப்பு’ என்பது தனி மனித அல்லது மக்களின் பாதுகாப்பு மட்டும் அன்றி அவை தமிழரின் வாழ்க்கையில் பல்வேறு நிலைகளிலும் நிலைபெற்றுத் தனக்கான பங்களிப்பைச் செய்து என வருவது அறியப்படுகிறது. தற்போதைய ஆய்வுக் கட்டுரையில் தமிழர் பாரம்பரியத்தில் எங்கெல்லாம் காப்பு முக்கியத்துவம் பெற்றுள்ளது என்பதுவும் அதற்கான உட்பொருளும் ஆய்வு செய்யப்படுகிறது.

**ஆய்வு நெறி**

தற்போதைய ஆய்வானது தரப்பகுப்பாய்வு (qualitative), நெறியின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பொதுவில் பண்பாட்டு விளக்கமுறைக்கு தரப்பகுப்பாய்வு

நெறியானது மிகப் பொருத்தமானதாக விளங்குகிறது (Creswell, 2003). தரப்பகுப்பாய்வு நெறியின் மூலம் ஒரு சமுதாயத்தில் பொதிந்துள்ள பண்பாட்டுக் கூறுகளின் உட்பொருளை கண்டறிவது இயலும் (Merrian, 2009). அதே வேளையில் அவற்றை விளக்குவதற்கும் இந்நெறியே சாலச் சிறந்தது). தரப்பகுப்பாய்வில் நூலக ஆய்வு நெறி இந்த ஆய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளது (Melissa Freeman, 2008).

இந்த ஆய்வு நெறியின் படி ஆய்வாளர் காப்பு குறித்த விளங்கங்களையும் அதன் சொற்பத்தத்தின் உட்பொருளையும் நூலக ஆய்வின் மூலம் கண்டறிவார், அதன் பின்னர் காப்பில் உள்ள பல்வேறு வகைகளையும் அதற்கான விளக்கங்களையும் நூலக ஆய்வின் மூலம் பல்வேறு முந்தைய ஆய்வுகளில் கூறப்பட்டுள்ள விளக்கங்களை நெறிப்படுத்தி அதனைத் தற்போதைய ஆய்வுக்கு ஏற்றவாறு வகைப்படுத்துவார். அதனைத் தொடர்ந்து பகுப்பாய்வின் துணைக்கொண்டு அதில் பொதிந்துள்ள உட்பொருளை ஆய்வு செய்து முன்வைக்கப்படும் (Merrian, 2009, p.2).

**தமிழர் சடங்குகளில் 'காப்பு'**

தமிழரின் வாழ்க்கை பல்வேறு சடங்குகளை உட்படுத்தியது. இவ்வகையான சடங்குகள் பலவும் சமயம் மற்றும் நம்பிக்கைச் சார்பில் நிகழ்த்தப்படுவதாக விளங்குகின்றன. தமிழரின் வாழ்க்கையில் பிறப்பு முதல் இறப்பு வரை பின் அதனையும் கடந்து, இறந்த ஆன்மா மோட்சத்தை அடையவும் சடங்குகள் நடத்தப்படுகின்றன. இவ்வாறு நிகழ்த்தப்படும் சடங்குகள் பலவற்றிலும் காப்புக் கட்டுதல் என்பது முக்கியத்துவம் உடையதாக விளங்குகின்றது.

காப்புக் கட்டுதல் என்பது பொதுவில் ஏதாகிலும் ஒரு சடங்கு தொடங்கப்படுவதற்கு முன்னர் செய்யப்பவது. ஒரு சடங்கு அல்லது அச்சடங்கில் பங்கேற்போர் எவ்வித பாதிப்புக்கும் ஆளாகாமம் பாதுகாக்கும் ஒரு சூட்சுமமான பாதுகாப்பு வளையமே காப்பு கட்டும் சடங்கின் நோக்கம். இந்தக் காப்பு என்பது பல்வேறு விதமாககக் கடைபிடிக்கப்பட்ட போதும் இதில் பொதிந்துள்ள தத்துவமும் அறிவியலும் ஒருவருக்கு மிகப்பெரிய கவசமாகத் திகழ்கிறது என்பதுவே காப்பு கட்டுதலின் தாத்பரியத்தில் ஒளிந்துள்ள சூட்சுமம் (சிங்காரவேலு முதலியார், 1998).

இவ்வாறு காப்புக் கட்டுதல் சில வேளைகளில் புறப்பொருள்களான வஸ்துக்களாலும் (மஞ்சள் கயிறு, ஐம்படைத்தாளி, உலோகக் காப்புகள், தர்பைப் புல்), சில வேளைகளில் கண்ணுக்குத் தெரியாத மந்திரக் கட்டுகளாகவும் (செய்யுள் காப்பு, கந்த சஷ்டி கவசம்) அமைவதுண்டு. எதற்காகக் அல்லது எந்தக் காரியத்திற்காகக் காப்பு கட்டுகிறார்கள் என்பதைப் பொருத்து இதன் முக்கியத்துவமும் காரணமும் அமையும் (சாமி சுந்தரம், 2000).

**கோவில் திருவிழாக்களில் ‘காப்பு’**

பொதுவில் காப்புக் கட்டுதல் என்றாலே அது கோவில் திருவிழாக்களில் கட்டப்படும் காப்பு என்றுதான் பொருள்படும். மற்ற சடங்குகளில் காப்புக் கட்டுதல் என்பது ஒரு உபசடங்காகப் பார்க்கப்படுகிறது. ஆனால் ஆலயத் திருவிழாக்களில் காப்புக் கட்டுதல் என்பது ஒரு தனித்த சடங்கு. பொதுவில் கோவில் திருவிழாக்கள் 7, 9, 11, 13 என்ற நாள்களில் எண்ணிக்கையில் கொண்டாடப்படும். இதில் காப்புக் கட்டி கொடியேற்றுதல் என்பது ஒரு நாள் விழாவாகவே அனுசரிப்பட்டுகின்றது (தசரதன், 1995).

காப்புக் கட்டுதலும் கொடியேற்றுதலும் ஒரே நாளில் நிகழும் சடங்குகள். ஓர் ஆலயத்தில் திருவிழா துவங்குவதற்கு முன்னர் வேத பாராயணம் செய்யப்பட்டு வேள்வி வளர்க்கப்படும். அதன் பின்னர் மந்திர உருவேற்றப்பட்ட காப்புக் கயிரை மூலவர், உட்சவர் போன்ற விக்கிரகங்களின் கைகளில் கட்டுவர். இவ்வாறு சுவாமியின் திருக்கரங்களில் காப்புக் கட்டிய பின்னர் திருவிழா முடியும் வரையில் சுவாமியானவர் அந்த ஆலயத்திலேயே வீற்றிருந்து அருள் செய்வார் என்பது இதன் தாத்பரியம் ஆகும்.

கோவிலில் சுவாமிக்குக் காப்புக் கட்டிய பின்னர் கொடிமரத்தில் கொடியேற்றப்படும் சடங்கு நிகழும். அவ்வேளையில் கொடிமரத்திற்கும் காப்புக் கட்டப்படும். ஆலயத்தில் கொடியேற்றும் சடங்கானது சுற்று வட்டார மக்களுக்கு ஆலயத்தில் திருவிழா துவங்கிவிட்டது என்பதற்கான முன்னறிவிப்பாகும். இதுவல்லாது ஆலயத் திருவிழாவை முன்னிருந்து நடத்திக் கொடுக்கும் புரோகிதர்கள், தர்மகர்த்தா, ஆலயத் தலைவர் போன்றோருக்கும் காப்பு கட்டப்படும்.

பொதுவில் ஆலயத் திருவிழாக்களின் போது காப்புக் கட்டுதல் என்பது பல்வேறு உட்பொருள்களை உள்ளடக்கியது. முதலில் காப்புக் கட்டிய பின்னர் அக்கோவில்

விளங்கும் மூர்த்தங்கள் யாவும் திருவிழா முடியும் வரை அவ்வூரின் எல்லையைக் கடக்காமல் தன்னை நாடி வரும் பக்தர்களுக்கு அருள் செய்வதாக ஐதீகம். அடுத்தது காப்புக் கட்டுவது என்பது மக்களுக்குத் திருவிழா குறித்த அறிவிப்பை வழங்குவதோடு, அவர்கள் செய்ய வேண்டியவை செய்யக் கூடாதவை ஆகியவை குறித்த நினைவுருத்தல்களாக அமையும். பொதுவில் கோவிலில் காப்புக் கட்டிய பின்னர் அவ்வூரில் குடியிருப்பவர்கள் வேறு இடங்களில் இரவு தங்கக் கூடாது எனும் கட்டுப்பாடு முன்வைக்கப்படுகிறது. திருவிழா துவங்கிய பின்னர் மக்கள் வேறு ஊர்களுக்குச் செல்வதாலோ அல்லது அங்கு இரவு தங்குவதாலோ திருவிழாவில் அவ்வூர் மக்களின் கூட்டம் இல்லாமல் போகக் கூடாது என்பதற்காகவே இந்த நூதன ஏற்பாடானது செய்யப்படுகிறது. ஏனெனில் திருவிழா என்பது தனிமனிதனால் செய்யப்படுவதன்று. இது ஊர் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து தங்களின் பங்களிப்பைச் செய்து ஒற்றுமையாய் நடத்தக்கூடியது.

மேலும் காப்புக் கட்டிய பின்னர் வீடுகளில் அசைவ உணவு சமைத்தல் கூடாது, வீட்டைச் சுத்தம் செய்து வைத்தல், தம்பதிகள் மனக்கட்டுப்பாட்டுடன் இருத்தல் போன்ற பல்வேறு கட்டுப்பாடுகளையும் முன்வைப்பதாய் அமைகிறது. இதனால் அத்திருவிழாவின் புனிதம் பாதுகாக்கப்படுகதாகப் ஏற்றுக் கொள்ளப்படுகிறது (அனங்கன், 2004).

**பொங்கல் திருநாளில்' காப்பு'**

மிகப்பழங்காலம் தொட்டே பொங்கல் திருநாளில் மூலிகைச் செடிகளைக் கொண்டு காப்புக் கட்டும் வழக்கம் இருந்து வந்துள்ளது. இதனை வெரும் சடங்காகக் கடைபிடித்த போதும், இது உள்ள நுட்பம் தமிழரின் அறிவியல் சிந்தனைக்குத் தக்கச் சான்று எனலாம். உண்மையில் காப்புக் கட்டு என்பது மூலிகைகள் அடங்கிய முதலுதவி பெட்டி என்றுதான் கூற வேண்டும். நவீன மருத்துவ வசதிகள் அற்ற காலத்தில், விஷக்கடி, ஒவ்வாமை, வயிற்றுப்போக்கு போன்ற சிறு சிறு பிரச்னைகளுக்குத் தேவையான மூலிகைகள் வீட்டில் தயாராக இருக்க வேண்டும் என்பதற்கான முன் ஏற்பாடு மூலிகைக் காப்பு எனப்படுகிறது.

பொங்கல் திருநாளில் தழந்தமிழர் ஆவாரை, சிறுபீளை, வேப்பிலை, மாவிலை, தும்பை, பிரண்டை போன்ற மூலிகைகளைக் கொண்டு காப்புக் கட்டுவவர். இன்றும்

ஆவாரை, சிறுபீளை, வேப்பிலை இற்றைக் கொண்டு காப்பு கட்டும் வழக்கம் உண்டு. மேலும் வீட்டு வாசலில் கரும்புடன் சேர்த்து மஞ்சள் கிழங்கையிம் கட்டுவர். பொங்கல் பானையிலும் மங்சள் செடியக் கட்டுவர். மஞ்சளை விட மிகச் சிறந்த கிருமிநாசினி வேரில்லை. பொங்கல் போன்ற திருநாள் காலங்களில் கிருமித் தொற்றினைக் கட்டுப் படுத்தவும், நோய் கண்டவர்களுக்குக் கைவைத்தியம் பார்த்து அவர்களுக்கு முதலுதவி செய்யவும் இந்தக் காப்பு மூலிகைகள் பெரும் பங்காற்றியுள்ளன (Tamilnaddu Vilakal, 1993).

**திருமணச் சடங்குகளில் 'காப்பு'**

திருமணச் சடங்குகளில் காப்புக் கட்டுதல் இன்றியமையாத ஒன்று. அதிலும் குறிப்பாக மணமக்களுக்குக் காப்புக் கட்டுதல் முதன்மைச் சடங்காகப் போற்றப்படுகிறது. திருமணத்தின் போது மணமக்களின் கைகளில் கொம்பு மஞ்சளை நூலில் சுற்றி அதனைக் கைகளில் கட்டுவதே காப்புக் கட்டுதல் ஆகும். இச்சடங்கு நிகழ்ந்த பின்னர் திருமணம் முடிவடையும் வரையில் இக்காப்பினை அவிழ்த்தல் கூடாது (மன்னார், 2011).

காப்பு என்பது அரண் போன்றது. மங்கள உரு வாய்ந்த மஞ்சள் கயிற்றை காப்பாக கட்டுவதன் மூலம் மணமக்கள் திருஷ்டி மற்றும் தீய சக்திகளால் திருமணத்தின் போது எவ்வித பாதிப்புக்கும் ஆளாகாமல் பாதுகாக்கும். இது திருமணம் தொடங்கி மறுநாள் காப்பு அவிழ்க்கும் வரை திருமணம் சம்பந்தமான அனைத்து நிகழ்ச்சிகளையும் தடையின்றி செய்வேன் என்பதை உறுதி செய்யும் சடங்காகும். அனைத்து நிகழ்ச்சிகளும் தடையின்றி நடைபெறும் வண்ணம் இடையூறு வராமல் காக்குமாறு தெய்வத்தை வேண்டிக் கட்டப்படுவது காப்பு (Rajantheran & Manimaran, 1994).

உண்மையில் காப்புக் கட்டியவுடன் மணக்கள் மனோ ரீதியில் திருமனத்திற்குத் தங்களை முழுமையாக உடன்படுத்திக் கொள்கின்றனர். இதனால் இவர்களின் கவனம் முழுவதும் திருமணத்திலேயே நிலைபெற்றிருக்கும். அதே வேளையில் காப்புக் கட்டிய பின்னர் இவர்கள் இன்னும் அதிகமான கவனத்துடன் செயல்படுவர். அதனால்தான் திருமண்த்தில் காப்புக் கட்டிய பின்னர் மணமக்கள் எந்த வேலையையும் செய்ய அனுமதிக்கப்படுவதில்லை. அதோடு இக்காப்பானது அவர்களுக்கு முதன்மை அங்கிகாரத்தை வழங்குவதாகவும் அமைகிறது (தஞ்சை எழிலன், 2011).

**வளைகாப்பு**

வளைகாப்பு / சீமந்தம் எனப்படுவது சூழ்கொண்ட பெண்களுக்குச் செய்யப்படும் ஒரு சடங்கு. இச்சடங்கு கர்பத்தின் ஆறாவது அல்லது எட்டாவது மாதத்தில் நடைபெறும். சீமந்தத்தின் போது பூரண கும்பம் வைத்து வேத மந்திரம் முழங்க நன்நீர் எடுத்து கர்ப்பிணிப் பெண்ணை நீராட்டுவர். அத்தோடு இறைவழிபாடு, சீர் வரிசை, பரிசுகள், வளையல்கள், விருந்து என அனைத்தும் நடக்கும். இவை சூழ்கொண்ட பெண்ணின் மனதில் நமக்கு அரணாகக் குடும்பமும் சுற்றமும் இருக்கிறது என்பதான தைரியத்தை ஊட்டும் என்பது நம்பிக்கை. சீமந்தம் பெரும்பாலும் பிராம்மண சமூகத்தில் நிலவும் வழக்காகும் (Rajantheran & Manimaran, 1994).

தமிழர்களிடத்தே வளைகாப்பு பெரும்பான்மையாகக் கடைபிடிக்கப்படுகிறது. கருப்பைக்கு உள்ளிருக்கும் குழந்தையோடு வெளியிலே இருந்தே தொடர்பு கொள்வதற்கான ஓர் உத்திதான் இந்த வளைகாப்பு. இச்சடங்கின் போது கர்ப்பமான பெண்ணின் இரண்டு கைகளிலும் ஒலி எழுப்பக் கூடிய வளையல்களை (காப்பு) குறிப்பாகக் கண்ணாடி வளையல்கள் அணிவிக்கப்பட்டு இச்சடங்கு நிகழ்த்தப்படும்.

வளைகாப்பு நடைபெறும் நாளில் உறவினர்கள் கருவுற்ற பெண்ணைச் சிறப்பாக அலங்கரித்து, அவளுடன் அவள் கணவனையும் அழைத்து வந்து அமரச் செய்வர். வளைகாப்பு நடக்கும் இடத்தில் பூக்கள், பழவகைகள், சந்தனம், குங்குமம், மஞ்சள், கண்ணாடி வளையல்கள், பல்வேறு வகையான இனிப்புப் பண்டங்கள் வைக்கப்பட்டிருக்கும். அவற்றோடு சர்க்கரைப் பொங்கல், எழுமிச்சை சாதம், தேங்காய் சாதம், நெய் சாதம் போன்ற சாதங்கள் இருக்கும் (கமலா செல்வராஜ், 2010).

கருவுற்ற பெண்ணின் கணவர் அந்தப் பெண்ணுக்கு மாலை அணிவித்து, நெற்றியில் குங்குமம் வைப்பார். சந்தனத்தை இரு கைகளிலும், கன்னங்களிலும் பூசுவர். அதனைத் தொடர்ந்து இருகைகளிலும் வளையல் அணிவித்துப் பன்னீர் தெளிப்பார். இதனை மற்ற உறவினர்களும் செய்வர். இவ்வாறு வளையைல் அணிவிக்கப்படும் போது தங்க வளையல் அணிவிக்கப்படுவதும் உண்டு. ஆனால் இதில் பிரதானமாக விளங்குவது கண்ணாடி வளையல்களே (Rajantheran & Manimaran, 1994).

பொதுவாக வளைகாப்புச் சடங்கு ஒரு பெண் கர்பம் தரித்து ஆறாவது முதல் எட்டாவது மாதம் வரை உள்ள கால கட்டத்தில் நடத்தப்படும். கருவில் இருக்கும் சிசுவானது உருக்கொண்ட 20 வாரங்களுக்குப் பின்னரே கேட்கும் திறனைப் பெறுவதாகக் அறிவியல் கூறுகிறது. கண்ணாடி வளையல்கள் அணிவிக்கப்படும் போது அதில் எழும் ஒலியானது வளையல்களின் ஒலி குழந்தையின் நரம்பு மண்டலத்தின் வளர்ச்சியைத் தூண்டுகிறது. இதனால் பிறக்கும் குழந்தையின் அறிவுத்திறன் வளர்கிறது.

இதுவல்லாது கண்ணாடி வளையல் அணிவிப்பது கருவுற்ற பெண்ணுக்கும் கருவில் இருக்கும் குழந்தைக்கும் பெரும் பாதுகாப்பு வளையமாகவும் விளங்குகிறது. ஆறு அல்லது எட்டாம் மாதத்திற்குப் பின்னர் குழந்தையானது ஓரளவிற்கு நல்ல வளர்ச்சியைப் பெற்றிருக்கும். இக்கால கட்டத்தில் கருவுற்ற பெண்ணானவள் மிகுந்த பாதுகாப்புடன் இருப்பது மிகவும் அவசியமான ஒன்று. ஏனெனில் கவனக் குறைவால் ஏதேனும் விபரீதம் நேர்ந்தால் அது மிகப் பெரிய ஆபத்தை விளைவிக்கலாம். பொதுவில் தமிழர் நம்பிக்கையில் கண்ணாடி உடைதல் என்பது துர்சகுனமாகப் பார்க்கப்படுகிறது. அதனால் கருவுற்ற பெண்ணானவல் தன் கைகளில் இருக்கும் கண்ணாடி வளையல்கள் உடையாமல் இருப்பதற்காக மிகுந்த கவனத்துடன் செயல்படுவாள். இந்த நம்பிக்கை சார்ந்த ஏற்பாடானது கருவுற்ற பெண்ணில் கவனத்தை அதிகரிக்கச் செய்து அவளை அவளே பாதுகாக்கும் ஏற்பாடாகவும் விளங்குகிறது. அதனால்தான் வளை என்பதோடு பாதுகாப்பைக் குறிக்கும் சொல்லான காப்பையும் சேர்த்து இதனை வளைகாப்புச் சடங்கு என்று கூறுகிறோம் (கமலா செல்வராஜ், 2010).

மேலும் பொன்னால் ஆன வளையல்கள் ஒலி எழுப்புவது கிடையாது. ஆனால் கண்ணாடி வளையல்கள் ஒன்றோடு ஒன்று உரசும் போது அதிகப்படியான ஒலியை எழுப்புகின்றன. இந்த ஒலியானது கருவுற்ற பெண்ணுக்கு மகிழ்ச்சியைத் தருவதோடு தான் பேறுகாலத்தில் இருக்கிறோம் என்பதற்கான கவன நினைவுருத்தலாகவும் அமைகிறது. அதோடு வீட்டில் உள்ளவர்களுக்கும் கருவுற்ற பெண் எங்கிருக்கிறாள் என்பதைக் காட்டவும் இது ஒரு சமிக்ஞையாக அமைகிறது. இதன் மூலம் கருவுற்ற பெண் குடும்ப உருப்பினர்களின் கண்பார்வையில் எபோதும் இருப்பது உறுதி செய்யப்படுகிறது. இதன் காரணம் தொட்டுத்தான் இந்தச் சடங்கானது வளையலைக் கொண்டு பெண்ணுக்குக் காப்பு எனும் பாதுகாப்பு நல்குவதான பொருள் கொண்டு வளைகாப்பாகப் பெயரிடப்பட்டுள்ளது (Rajantheran & Manimaran, 1994).

**ஐம்படைத்தாலி எனும் காப்பு**

ஐம்படைத்தாலியும் வசம்பும் பிறந்த குழந்தைக்கான காப்பாகத் தமிழர் பாரம்பரியத்தில் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. ஐம்படைத் தாலி என்பது பண்டைக் காலத்திலிருந்தே தமிழரிடையே வழக்கில் இருந்த ஒருவகை காப்பு அணிகலன். சிறுவர்களின் கழுத்தில் காவலுக்காக அல்லது பாதுகாப்பு நிமித்தமாக இது அணியப்பட்டதாகத் தெரிகிறது. புறநானூறு, அகநானூறு போன்ற சங்ககால நூல்களிலும், மணிமேகலை, பெரியபுராணம், கலிங்கத்துப் பரணி, கம்பராமாயணம், திருவிளையாடற் புராணம் போன்ற இலக்கியங்களிலும் ஐம்படைத் தாலி தொடர்பான குறிப்புக்கள் உள்ளன (மீனாட்சி பாலகணேஷ், 2022).

ஐம்படைத்தாலியில் ஐந்து ஆயுதங்கள் பொறிக்கப்பட்டிருக்கும். வைணவத்தில் இதனைப் பஞ்சாயுதம் என்று அழைப்பர். காத்தற் கடவுளாகிய திருமாலின் சங்கு, சக்கரம், வில், வாள், தண்டம் என்னும் ஐந்து ஆயுதங்களை இது குறிக்கும். இந்த ஐந்து வகையான திருமாலின் ஆயுதங்கள் ஒரு குழந்தைக்குப் பாது காப்பு அரணாக விளங்கும் என்பதுவே இதன் பொருள்.

மற்ற அணிகலன்களைப் போல அல்லாமல் ஐம்படைத்தாலி காப்புக்காகவே அணியப்பட்டது. இது இன்றும் பல பண்பாட்டு வழக்கில் உள்ளது. பழந்தமிழரிடம் பேய், பிசாசு போன்ற எதிர்மறை ஆற்றல் குறித்த நம்பிக்கை சங்க காலம் தொட்டே இருந்து வந்துள்ளது. மேலும் பலம் குன்றியவர்களிடத்தே இது போன்ற எதிர்மறை ஆற்றல்கள் தனது ஆக்கிரமிப்பைச் செய்யும் என்ற கருத்தும் உள்ளது. பிறந்த குழந்தை முதல் ஒருவர் வாலிபப் பருவம் எய்தும் வரையில் அவர்கள் பலவீனமானவர்களாகவும் மற்றவரின் பாதுகாப்பில் இருக்க வேண்டியவர்கள் எனவும் கருதப்படுகின்றனர். ஆகையால்தான் இளமைப்பருவம் வரையில் பிள்ளைகள் பெற்றோரைச் சார்ந்து வாழ்கின்றனர்.

ஆயினும் பெற்றோரும் காக்க இயலாத சூழலில் தமது பிள்ளைக்கு எப்போதும் தெய்வம் துணையாய் விளங்கும் என்ற நம்பிக்கையில்தான் காக்கும் கடவுளான திருமாலின் ஐபடைத்தாலியைப் பிள்ளைகளின் பாதுகாப்பிற்காக அணிவிக்கிறார்கள். இது தெய்வம் தோன்றாத் துணையாக பிள்ளைகளுக்குக் காப்பாக விளங்கும் என்ற

பழந்தமிழரின் சிந்தனையையும் இறைவன் மீது கொண்டுள்ள நம்பிக்கையையும் பறைசாற்றுவதாக அமைகிறது (Rajantheran & Manimaran, 1994).

**செய்யுளில் காப்பு @ காப்புச் செய்யுள்**

தனி மனிதன் மட்டுமல்லாது தமிழன் தான் படைக்கும் இலக்கியங்களும் பாதுகாக்கப்பட வேண்டி செய்யுளுக்கும் காப்புச் செய்யும் சிந்தனை உடையவன் என்பது இலக்கியங்களில் துவக்கமாக வரக்கூடிய காப்புச் செய்யுள்களின் வழி அறியப்படுகிறது. காப்புச் செய்யுள் என்பது தமிழ் இலக்கியங்கள் பலவற்றில் முதலாவதாக அமையும் பாடல். கவிஞர் தான் படைக்க நினைத்துள்ள நூலினை வெற்றிகரமாக முழுமையாக இயற்றி முடிப்பதற்கு இறைவன் துணை நின்று காக்க வேண்டும் என்ற கருத்தில் இதைப் பாடுவார். எனவே இது காப்புச் செய்யுள் எனப்படுகிறது.

பழந்தமிழர் காலம் தொட்டு பாரதியின் காலம் செய்யுள்களுக்குக் காப்புச் செய்யுள் படைப்பது நிலையான ஒன்றாக விளங்குகிறது. கம்பராமாயணத்தில் மட்டும் 20 காப்புச் செய்யுள்கள் உள்ளன. பாரதி, பாஞ்சாலி சபதத்தை இயற்றும் முன்னர் பிரம்ம ஸ்துதி மற்றும் சரஸ்வதி வணக்கத்துடன் துவங்குகிறார். பொதுவில் எல்லா இலக்கியங்களிலும் விநாயகர் துதியும், கலைமகள் துதியும் இடம்பெறுவது இருக்கும். இவை சித்தர் பாடல்களில் குறிப்பாக மருத்துவம் சார்ந்த நூல்களில் கட்டாயம் இருக்கும்.

நூலுக்குக் காப்பிடுவதன் மூலம் தாங்கள் படைக்கவிருக்கும் படைப்பிலக்கியமானது எவ்வித விக்கினமும் இன்று உருவாவதற்கும், அந்தப் படைப்பிலக்கியம் யாவருக்கும் நன்மை பயப்பதாக அமைவதற்கும், காலத்தால் அழிவுறாமல் இருப்பதற்கும், அதில் குறை ஒன்றும் இல்லாதிருக்கவும் காப்புச் செய்யுளிடுதல் வழக்கமாகும். இதில் விநாயகப் பெருமான் மூல முதல்வராவும், விக்கினங்களைத் தீர்ப்பவராகவும் விளங்குவதால் அவருக்கு முதல் வணக்கமும் வேண்டுதலும் வைக்கும் வண்ணம் விநாயகர் துதி காப்பாகப் பாடப்படுகின்றது. இதுவல்லாது, சிவபெருமான், திருமால், அன்னை பராசக்தி ஆகியோரின் அருள் வேண்டியும் காப்புச் செய்யுள் இயற்றப்படுவதுண்டு.

கம்பர் தனது *இராமாயணக்* காப்பியத்தில்

> "அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சிலே ஒன்றை தாவி
> அஞ்சிலே ஒன்று ஆறாக ஆருயிர் காக்க ஏகி
> அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக் கண்டு அயலார் ஊரில்
> அஞ்சிலே ஒன்று வைத்தான் அவன் அவன் எம்மை அளித்துக் காப்பான்".
>
> (கம்பராமாயணம்)

எனச் சுந்தரகாண்டத்தின் நாயகனாகிய அனுமனைக் காப்புச் செய்யுளில் போற்றுகின்றார். இது தமிழர் தம் உயிரைப் போலவே தாம் படைத்தத் தமிழ் இலக்கியங்களையும் போற்றிப் பேணும் பண்பினர் என்பதாகக் காட்டுகிறது.

**மூலிகைக் காப்பு**

மூலைகைகள் சித்த மருத்துவத்திலும் ஆயுர்வேத மருத்துவத்திலும் இன்றியமையாதன. இது இந்தியப் பாரம்பரியத்திலிருந்து தோன்றியது. இயற்கை வளம் மிகுந்த இந்திய நாட்டில் சுமார் 18,000 பூக்கும் தாவரங்கள் உள்ளன. இதில் 7000 க்கும் அதிகமான தாவரங்கள் மருத்துவப் பயன்பாடு கொண்டவை என்று இந்திய மருத்துவ முறைகளின் நூல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்திய மருத்துவத் தாவரங்கள் தகவல் தரவு தொகுப்பின்படி 7263 தாவரவியல் பெயர்கள் பட்டியலிப்பட்டுள்ளன. தமிழரின் பாரம்பரிய மருத்துவ முறையான சித்த மருத்துவ முறையில் மட்டுமலீது வரை 2559 தாவரவியல் பெயர்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் 1840 மூலிகைத் தாவரங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன (https://pib.gov.in/PressReleseDetail.aspx?PRID=1633089).

இவை தாவரவர்க்கங்கள் என்ற போதும் இவற்றிலும் மாறுபட்ட தன்மைகள் உள்ளன. அதனால்தால் மூலிகைகளை தேவ மூலிகை, மனித மூலிகை மற்றும் அசுர மூலிகை என மூன்று வகையாகப் பகுத்தனர் நம் முன்னோர். இவற்றின் தன்மையும் தரமும் கூட வேறு வேரானவை:-

1) தேவ மூலிகைகள் : இவை பொதுவில் மிக அரிதாகக் கிடைக்கக்கூடியவை. மேலும் தேவ மூலிகைகள் மிகவும் புனிதம் மிக்கவையாகவும் தெய்வத்தன்மை பொருந்தியதாகவும் குறிப்பிடப்படுகின்றன. அதனால்தன் இவை மிக அரிதாகவே காணப்படுகின்றன. ஒரு சில தேவ மூலிகைகள் பௌர்ணமி போன்ற காலங்களில்தான் வெளிப்படும் என்றும் அதற்கு முறையான பூசனைகள்

செய்தால்தான் அவை கைக்குக் கிடைக்கும் என்று சித்த வைத்தியர்கள் கூறுவர். இவை மிகக் கடுமையான புற்று நோய், குட்டம் போன்ற நோய்களைத் தீர்க்கும் வல்லமை உடையவை. கருடப்பச்சை, மேகசஞ்சீவினி, சந்திரகாந்தி, கருடசஞ்சீவினி போன்ற மூகிகைகள் தேவ மூலிகைகள் ஆகும். இவற்றை ராஜ மூலிககள் என்றும் குறிப்பிடுவர்.

2) மனித மூலிகைகள் – இவை நமது அன்றாட வாழ்க்கையில் கிடைக்கக் கூடிய மூலிகைகள். பெரும்பாலும் பாட்டி வைத்தியம், கை வைத்தியம் போன்றவற்றிற்கும் இவை பயன்படுத்தப்படும். இவை சாதாரன நோர்களுக்கும் இரணங்களுக்கும் நிவாரணியாக விளங்குகின்றன. எளிதில் கிடைக்கக்கூடியது அதிக சுத்திகரிப்புக்கு உட்படுத்தப்படாததுமான இம்மூலிகைகள் சாமான்ய மக்களாலும் அன்றாடம் பயன்படுத்தப்படுகின்றன. இஞ்சி, கற்பூரவல்லி, வெற்றிலை, கரிவேப்பிலை, கண்டங்கத்திரி, முருங்கை போன்ற மூலிகைகள் மனித மூலிகைகளாவன.

3) அசுர மூலிகைகள் – அசுர மூலிகைகளாவன ஒருவரது மனதையும் சிந்தனையையும் மயக்கும் தன்மை உடையவை. கஞ்சா, புகையிலை, அபின் போன்ற மூலிகைகளை அசுர மூலிகைகள் என்று குறிப்பிடுவர். இவை மருத்துவத்துறையில் பயன்படுத்தும் போது ஒருவருக்கு நன்மையையும், மனக்கட்டுப்பாடின்றி சுயத்தேவைக்காகப் பயன்படுத்தும் போது தீமையையும் விளைவிக்கக் கூடியதாகையால் இவற்றை அசுரப் பண்பு உடையதாகச் சித்தரிப்பதற்காக இப்பெயர் இடப்பட்டுள்ளது (Silllalee, 2013).

இவ்வாறு மூகிகைகள் தேவ மனித மற்றும் அசுரப் பண்புகளை உடையதாக விளங்குவதால் அதனை மனம் விரும்பியது போலப் பறிக்கவோ பயன்படுத்தவோ இயலாது. சில வேளைகளில் மூலிகைகள் அஷ்ட கர்மம் எனப்படும் மாந்திரீக வேலைகளுக்கும் தவறாகப் பயன்படுவதால் சித்தர்கள், ரிஷிமார்கள், தெய்வங்களின் சாபம் மூலிகைகளுக்கு உண்டு. எனவே எந்த மூலிகையை பறிக்கும் போதும் அவர்களின் சாபம் தீர்க்கும் மந்திரம் ஜெபித்த பின்னரே பறிக்கவேண்டும்.

ஆகவே ஒரு மூலிகையைப் பறிக்கும் முன்னர் அதற்குச் சாப நிவர்த்தி செய்து பிராண பிரதிஷ்டை செய்து துாப தீபம் காட்டி மஞ்சள் நுால் காப்புக் கட்டியும், சில வேலைகளில் பொங்கலிட்டு பால் பழம் நைவேத்தியம் வைத்துத் துாப தீபங் காட்டி அதற்குரிய மந்திரத்தால் குறிப்பிட்ட உரு மந்திரம் ஜெபித்து அம்மூலிகைகளைப் பறித்தாலே அது அதற்கான பலனைத் தரும். அதிகாலையில் மூலிகைச் செடியைப் பிடுங்கும்போது, உடல் நலம் சீராக வேண்டும் என்று வேண்டிக் கொண்டு, செடியை அடிவேர் அறுந்துவிடாமல்

கவனமாக எடுத்து பயன்படுத்தினால் பயன் தரும். இது தேவ மூகிகைகளுக்கு மட்டுமல்லாமல் அசுர மற்றும் மனித மூலிகைகளுக்கும் பொருந்து. அதனால்தான் மூலிகைகளுக்கும் கப்பு கட்டும் வழக்கத்தைப் பழந்தமிழர் கொண்டிருந்தனர்.

**முடிவுரை**

தமிழர் வாழ்க்கையில் காப்பு என்று காணும் போது இது அவர்களின் வாழ்க்கையில் தொன்று தொட்டு வந்துள்ளது என்பதோடு மட்டுமல்லாமல் இன்றுவரை கட்டிக் காக்கப்படும் ஒரு பண்பாட்டுக் கூறாகவும் அவர்களின் வாழ்வியல் முறையாகவும் விளங்குவதைக் காண முடிகின்றது. பிறப்பு முதல் இறைப்பு வரை செய்யப்படும் அனைத்துச் சடங்குகளிலும் இவை நிலவுவதை அறியலாம். இவை மனோரீதியாக அவர்களுக்குப் பாதுகாப்பை நல்குவதோடு மட்டுமல்லாமல், அறிவியல் பூர்வமாகவும் அவர்கள் வாழ்க்கையில் நன்மைகளைச் செய்வதாக உள்ளது.

அடிப்படையில் காப்புக் கட்டுதல் என்பது தனி மனிதனிடத்திலும் ஒரு சமுதாயத்திலும் சுயக்கட்டுப்பாட்டையும் ஒழுக்கத்தையும் விதைக்கிறது. அச்சமுதாயம் கட்டுக் கோப்புடன் விளங்குவதற்கும், எடுத்த காரியம் எவ்வித விக்கினமும் இன்றிச் சீராகச் செல்வதற்கும் தமிழர் கண்ட காப்புக் கட்டும் முறையானது சிறந்த சமூகவியல் சிந்தனையாக உள்ளது. இதில் பொதிந்துள்ள ஆன்மீக, சமயச் சிந்தனைகளும், நம்பிக்கைகளும் இக்காப்புக் கட்டும் முறைக்கான பெரிய பலமாக அமைந்ததுடன் இது பன்னெடுங்காகம் நிலைத்திருப்பதற்கும் ஆதாரமாக விளங்குகின்றன.

## Reference


Anankan. (2004). *Alaya valipadu: Valipadugalin Thotram, Sadangugal, Palangal*. Alagu Publication.

Balasubramanian, S. (1974). *Tamil Ilakiya Varalaru*. Chennai: Pari Nilayam.

Creswell W., John. (2003). *Research Design Qualitative, Quantitative And Mixed Methods Approaches*. (2nd Edition). London: Sage Publication, Inc.

Kamala Selvaraj. (2010). *Pirappu Muthal Irappu Varia Ulla Sadangugal*. Narmatha Pathipagam.

*Kambaramayanam*.

*Kriyavin Tarkala Tamil Agarathi*. (1992). Government of India.

Mannaar, Ve. (2011). *Kaalamthorum Thirumanam*. Bharathi Puthakalayam

Meenakshi Balganesh. (2022). *Pillaitamil – Panmugapaarvai*. Pusaka Digital Media.

Melissa Freeman. (2008). Hermaneutics. In M., Given Lisa (Ed.), The Sage *Encyclopedia of Qualitative Research Methods*. (Vol. 1, pp. 385-388). London: Sage Publication, Inc.

Merrian, B., Sharan. (2009). *Qualitative Research A Guide To Design And Implementation*. San Francisco: A Wiley Imprint.

Patrick Nolan, (1999). *Human Societies: An Introduction Macro Sociology*. New York: McGraw Hill College.

Rajantheran, M & Manimaran, S. (1994). *Adat Dan Pantang Larang Orang India*. Kuala Lumpur: Penerbitan Fajar Bakti Sdn, Bhd.

Sami Sundaram, Anthony Raja, R Tamil Selvan. (2000). Tamil Ilakkiyangal unarthum Valviyalum kalaikoorugalum. Archers & Elevators Publishing House

Silllalee, K. (2013). "Spritualizm and Siddha Medicine as Portrayed by TV Serial 'Sivamayam', *Journal of Indian Studies*.

Singaravelu Mudaliyar. (1998). *Abithana Sinthamani*. Asian Educational Service.

*Tamiḻnaddu Vilakkal*. (1993). Manimegalai Pirasuram. Volume 1.

Tasarathan. (1995). *Maariyamman kataippaṭal*. Tamil Oolaiccuvadigal paathukaakkum Maiyam.

Taylor, Edward, B., (1958). *The Origin Of Culture*. New York: Harper & Row Publisher.

Thanjai Ezhilan. (2011). *Tamil Thirumanam*. Pustaka Digital Media.

https://agarathi.com/word

https://pib.gov.in/PressReleseDetail.aspx?PRID=1633089